தேதி : 12.08.2026

அசல் வழக்கு எண் : 89/2012

பிரதிவாதி தரப்பு சாட்சி 1 : திரு.மனோகரன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு சொத்தில் சர்வே எண் 103/1, 103/2 நான் கிரயம் பெற்றுள்ளேன். சர்வே எண் 103 ன் மொத்த விஸ்தீர்ணம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. சர்வே எண் 103 ன் மொத்த விஸ்தீர்ணம் 6 ஏக்கர் 4 சென்ட் என்றால் சரிதான். சர்வே எண் 103/1 ல் ஒரு ஏக்கர் 51 சென்ட், சர்வே எண் 103/2 ல் ஒரு ஏக்கர் 80 சென்ட் கிரயம் பெற்றுள்ளேன். ஒரு ஏக்கர் 51 சென்ட்டை முனியப்பா, மாறம்மா என்பவரிடமிருந்து கிரயம்பெற்றேன். முனியப்பாவின் அப்பா பெயர் திம்மராயன். முனியப்பாவின் மனைவி பெயர் மாறம்மா. முனியப்பாவும், அவர் மனைவி மாறம்மாவும் தான் ஒரு ஏக்கர் 51 சென்ட் எனக்கு கிரயம் கொடுத்தார்கள். என்னுடைய அப்பா வெங்கடரமணப்பா தான் அவர்களிடமிருந்து 1969 ம் ஆண்டு கிரயம் பெற்றார். 1 ஏக்கர் 80 சென்ட்டை கெஞ்சப்பா, கெம்பக்கா ஆகியோரிடமிருந்து என் அப்பா தான் 1974 ம் ஆண்டு கிரயம் பெற்றார். கெஞ்சப்பாவின் அப்பா பெயர் முனியப்பா. முனியப்பாவுக்கு தான் அந்த சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதேபோல் ஒரு ஏக்கர் 51 சென்ட் நிலம் திம்மராயப்பாவுக்கு தான் பாத்தியப்பட்டது என்றால் அவருடைய அண்ணன், தம்பி 4 பேருக்கு பாத்தியப்பட்டது. திம்மராயப்பாவின் சகோதரர்கள் பெயர் கெஞ்சேகவுடு, முனிகெம்பைய்யா, முனியப்பா ஆவார்கள். கெம்பக்கா என்பவர் கெஞ்சப்பாவின் உடன் பிறந்த அக்கா. அவர்கள் இருவரும் முனியப்பாவின் பிள்ளைகள். ஒரு ஏக்கர் 80 சென்ட் நிலத்தை திம்மராயப்பா, முனியப்பா, ஆகியோர்களிடமிருந்து நாங்கள் கிரயம் வாங்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் அப்போது உயிரோடு இல்லை.

அவர்கள் உயிரோடு இருக்கும் போது எதற்காக சொத்தை வாங்கவில்லை என்றால் அவர்கள் அப்போது கிரயம் கொடுக்க முன்வரவில்லை. நான் ஆக மொத்தம் 3 ஏக்கர் 31 சென்ட் கிரயம் பெற்றுள்ளேன். கெஞ்சேகவுடு, கெம்பேகவுடு சேர்ந்து முத்தேகவுடுவிடமிருந்து 1919 ம் ஆண்டு கிரயம் பெற்றார்கள் என்றால் சரிதான். அந்த அசல் கிரய ஆவணத்தை நான் தேன்கனிக்கோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்து குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கெஞ்சேகவுடு, கெம்பேகவுடு உறவினர்கள் கிடையாது. அவர்கள் கிரயம் பெற்ற சொத்தில் ஆளுக்கு பாதி பாகம் உரிமை உள்ளது என்றால் சரிதான். கெஞ்சேகவுடு, கெம்பேகவுடு ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் வெவ்வேறு பிரிவுகளை சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல. கெஞ்சேகவுடுவுக்கு 3 ஏக்கர் 2 சென்ட் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. கெஞ்சேகவுடு கிரயம் பெற்று அந்த சொத்தை அவருடைய சகோதரர்களுக்கும் பாகமாக பிரித்துக் கொடுத்துள்ளார். அவ்வாறு கெஞ்சேகவுடு எந்த சொத்துக்களையும் பாகப்பிரிவினை செய்து அவருடைய சகோதரருக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு பாகப்பிரிவினை நடந்ததற்கு ஆதாரம் உள்ளதா என்றால் அதற்கு ஆதாரம் கிடையாது. வாய்மொழியாக பாகபிரிவினை ஏற்பட்டது. கெஞ்சேகவுடு, கெம்பேகவுடு சேர்ந்து கிரயம் பெற்ற ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கெஞ்சேகவுடுவின் மகன் சிக்கமாறப்பா, திம்மராயப்பா, முனியப்பா, முனிகெம்பைய்யா ஆகியோர்கள் சேர்ந்து கெம்பேகவுடுவுக்கு சொந்தமான மீதி பாதி பாகத்தை 1959 ம் ஆண்டு கிரயம் பெற்றார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த சொத்தை நான்கு பேர்களும் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதில் சிக்கமாறப்பாவுக்கு 4 ல் ஒரு பாகம் கிடைக்கக்கூடியது

என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 6 ஏக்கர் 4 சென்ட்டில் பாதி பாகத்தில் 4ல் ஒரு பங்காக எனக்கு 76 சென்ட் மட்டும் தான் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. அதற்கான அசல் ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு அப்பாவுக்கு கிரயம் கொடுத்தவர்களுக்கு தலா 76 சென்ட் தான் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. நான் தலா 76 சென்ட் நிலம் இரண்டு சொத்துக்கள் ஆக மொத்தம் 1 ஏக்கர் 52 சென்ட் வாங்குவதற்கு பதிலாக 3 ஏக்கர் 31 சென்ட் நிலத்தை வாங்கியதாக தவறாக கிரயப் பத்திரம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. திம்மராயப்பாவும், முனியப்பாவும் என்னுடைய அப்பாவுக்கு கிரயம் கொடுக்காததால் அந்த கிரயப் பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் திம்மராயப்பா, முனியப்பாவின் வாரிசுகளை ஏமாற்றி கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் 3 ஏக்கர் 31 சென்ட் உரிமை உள்ளது என்று பொய்யாக வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் மற்ற பிரதிவாதிகளுக்கும் சேர்த்து வழக்கு நடத்தி வருகிறேன். நான் மற்ற அனைத்து பிரதிவாதிகளுக்கும் சேர்த்து வழக்கு நடத்துவதாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 5வது பிரதிவாதி ராமசந்திராவுக்கு சர்வே எண் 103 ல் 6 ஏக்கர் 4 சென்ட்டில் அவருக்கும் ஒரு பாகம் உள்ளது. அவருக்கு ஒரு ஏக்கர் 50 சென்ட் நிலம் பாகம் உள்ளது. 15வது பிரதிவாதி வெங்கடேஷ்க்கு சர்வே எண் 103 ல் எந்த பாகமும் கிடையாது. சர்வே எண் 102/1 ல் நான் கிரயம் பெறவில்லை. சர்வே எண் 104 லிலும் நான் கிரயம் பெறவில்லை. சர்வே எண் 103/1, 103/2 சொத்துக்களை தவிர மற்ற சொத்துக்களில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான். மற்ற சொத்துக்களுக்கு உரிமையுள்ளவர்கள் தற்போது நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்கள். அந்த சொத்துக்களை பொறுத்து

அவர்களுக்கு தான் உரிமையுள்ளது என்றாலும், எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 103/1, 103/2 கிரயம் பெற்றது செல்லாது என்றாலும், அதனால் நான் கிரயம் பெற்றது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read over to the witness and acknowledged by him/her to be correct.

SANTHOSH BASKAR Digitally signed by SANTHOSH BASKAR

Additional District Judge,
Hosur.